உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்.

(All Rights Reserved)

" திருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம் "

மலர் 3. Vol. 3.	வெகுதான்யஸு புரட்டாசிமீ செப்டம்பர்—1938	இதழ் 6. No. 6.

திருப்புகழ்.

பழநி—(திருவாவினன்குடி)

சிவனார் மனங்குளிர உபதேச மந்த்ரமிரு
  செவிமீதி லும்பகர்செய் குருநாதா
சிவகாம சுந்தரிதன் வரபால கந்தனின
  செயலேவி ரும்பியுளம் நினையாமல்
அவமாயை கொண்டுலகில் விருதா அலைந்துழல
  மடியேனை அஞ்சலென வரவேணும்
அறிவாக மும்பெருக இடரான துந்தொலைய
  அருள்ஞான இன்பமது புரிவாயே
நவநீத முந்திருடி உரலோடெ யொன்றுமரி
  ரகுராமர் சிந்தைமகிழ் மருகோனே
நவலோக முங்கைதொழு நிசதேவ லங்கிருத
  நலமான விஞ்சைகரு விளைகோவே
தேவயானை யங்குறமின் மணவாள சம்ப்ரமுறு
  திறல்வீர மிஞ்சுகதிர் வடிவேலா
திருவாவி னன்குடியில் வருவேள் சவுந்தரிக
  சேகமேல்மெய் கண்டவிறல் பெருமாளே.

பதவுரை.

சிவனார் மனங்குளிர - சிவபெருமானுடைய திருவுள்ளமானது (பிரணவ மந்திரோபதேச அமுதத்தால்) குளிர்ந்து இன்புற்றுவிளங்க, உபதேச மந்த்ரம் - (வெளிப்படையாகக் கூறத்தகாததும்) சீடனுக்குக் குருநாதன் உபதேசமுறையால் கூறத்தக்கதுமாகிய பிரணவமந்திரப் பொருளை, இருசெவி மீதிலும் பகர்செய் - (வாய்விட்டுச் சொல்ல வொண்ணாததால் சின்முத்திரையால் காட்டியதோடு) இரண்டு செவிகளிலும் அப்பொருள் நிரம்புமாறு உபதேசித்தருளிய, குருநாதா - சற்குருநாதரே!, சிவகாம சுந்தரி தன் வரபால - சிவமூர்த்தியை விரும்பியுள்ள அழகில் சிறந்த உமாதேவியாருடைய பெருமைபொருந்திய திருக்குமாரரே!, கந்த - கந்தப்பெருமானே!, நவநீதமும் திருடி - (கோபிகைகள் வீட்டில் பால் தயிர் மட்டுமன்றி) வெண்ணெயையுந்திருடி, உரலோடே ஒன்றும் - (யசோதையினால்) உரலுடன் பிணித்துக் கட்டப்பெற்ற, அரி - பாவங்களை யொழிப்பவராகிய கண்ணபிரானாகவும், ரகுராமர் - ரகுகுலத்தில் இராமசந்திரராகவும் அவதரித்த நாராயணமூர்த்தி, சிந்தைமகிழ் - திருவுள்ளம் மிகவும் மகிழும்படியான, மருகோனே - மருகராக எழுந்தருளியவரே!, நவலோகமும் கைதொழு - ஒன்பது கண்டத்தினர்களும் கைகூப்பி வணங்குகின்ற, நிசதேவ - உண்மைத் தெய்வமே!, அலங்கிருத - (இரத்தின மணியணி பொன்மாலைகளால்) அலங்கரிக்கப்பட்டவரே! நலமான விஞ்சைகரு - நன்மையைத்தரும் கல்வியின்மூலம், விளைகோவே - விளைகின்ற கலாதிபரே!, தெவயானை அம் குறமின் மணவாள - தெய்வயானையம்மையாருக்கும் அழகிய மின்னலைப்போன்ற வள்ளியம்மையாருக்கும் நாயகரே!, சம்ப்ரம் உறு - சம்பிரமம் பொருந்திய, திறல் வீரம் மிஞ்சு - அளப்பற்ற ஆற்றலும் வீரமும் மிகுந்துள்ள, கதிர்வேலா - ஒளிமிகுந்த வேலாயுதத்தையேந்தியவரே! திரு ஆவினன்குடியில் வரு வேள் - திருவாவினன் குடியென்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள செவ்வேளே!, சவுந்தரிக - இணையற்ற கட்டழகுடையவரே!, செக மேல் மெய்கண்ட - உலகில் உண்மை ஞானத்தைக் கண்டுரைத்த, விறல் பெருமாளே! - வலிமை பொருந்திய பெருந்தகையினரே! நின செயலே விரும்பி உளம் நினையாமல் - தேவரீருடைய திருவருட்செயல்களையே பெரிதும் விழைந்து அவ்வருள் விளையாடல்களை உள்ளத்தில் நினையாமற்படிக்கு, அவமாயைகொண்டு - பயனில்லாது வைகும் மகா மாயைக்குள் மூழ்கி, உலகில் விருதா அலைந்து உழலும் - உலகின்கண் வீணான காரியங்

களில் மிகவும் அலேந்து உழன்றுகொண்டிருக்கும், அடியேனே அஞ்சல் என வரவேணும் - அடியேனைப் பயப்படாதே என்று சொல்லி திடமுறச் செய்யும்பொருட்டு தேவரீர் வந்தருளவேண்டும், அறிவு ஆகமும் பெருக - (ஊன சரீரத்தைவிட்டு) ஞான சரீரத்தைப்பெறவும், இடரானதும் தொலேய - (பிறப்பிறப்பாகிய) துன்பமானது அறவே நீங்கவும், அருள் ஞான இன்பமது புரிவாயே - தேவரீருடைய திருவருள் ஞானத்தால் விளேயும் அத்துவிதப்பேரின்பத்தைத் தந்து அருள்புரிவீர்.

பொழிப்புரை.

(பிரணவ மந்திரப் பொருள்விளக்க உபதேசத் திருவமுதால்) சிவபெருமானுடைய திருவுள்ளமானது குளிரும்படி, உபதேசமுறையாகக் கூறத்தக்க குடிலே மந்திரத்தின் பொருளே, (காதில் ஞான முத்திரையாக விளக்கியதுமல்லாமல்) அவருடைய இரு செவிகளிலும் உபதேசித்தருளிய ஞானகுருநாதரே! சிவகாம சுந்தரவல்லியம்மையாருடைய சிறந்த திருக்குமாரரே! கந்தமூர்த்தியே! (பால் தயிருடன்) வெண்ணெயையும் களவாடி, (யசோதையால்) உரலில் கட்டுப்பட்ட கண்ணபிரானும், பாவத்தை நீக்குபவரும், ரகுகுலத்தில் அவதரித்த ஸ்ரீராமச்சந்திரும் ஆகிய விட்டுணுதேவர் சிந்தைமகிழ் மருகரே! ஒன்பது கண்டத்தவர்களாலும் வணங்கப்பட்ட மெய்த் தெய்வமே! (மணியணிமலர்களால்) அலங்கரிக்கப்பட்டவரே! நன்மையைத்தரும் கல்வியின் மூலம் விளேதற்கு நிலேக்களனுய் விளங்கும் தலேவரே! தெய்வயானேயம்மையாருக்கும் குறவர் குடியில் தோன்றிய அழகிய மின்னலே நிகர்த்த வள்ளியம்மையாருக்கும் மணவாளரே! சம்பிரமம் பொருந்திய வல்லபமும் வீரமுடைய கதிர் வேலாயுதக் கடவுளே! திரு ஆவினன்குடியென்னும் திவ்யஸ்தலத்தில் எழுந்தருளியுள்ள செவ்வேட்கடவுளே! கட்டழகுடையவரே! உலகில் மெய்ப்பொருளேக் கண்டுரைத்த அறிவாற்றலுடைய பெருமையிற் சிறந்தவரே! தேவரீருடைய திருவருட் செயலே விரும்பி மனத்தில் நினேந்து துதிக்காமற்படிக்கு பயனற்றமாயையிற் சிக்கி, உலகில் வீணுக அலேந்து (வாணுளேக்கழித்து) சுழன்று திரிகின்ற அடியேனே அஞ்சேல் என்று அபயஸ்தம் தரும்பொருட்டுவந்தருளவேண்டும். (ஊன உடம்பு நீங்கி) ஞான உடம்பைப்பெறவும் (பிறப்பிறப்பாகிய) பெருந்துன்பம் நீங்கவும் திருவருள் ஞான இன்பத்தை அடியேனுக்குக்கொடுத்து அருள்புரிவீர்.

விரிவுரை.

சிவனார் மனங்குளிர . . . . . . குருநாதா :—

சிவபெருமான் தமது குமாரராகிய குகப்பெருமானிடம் உபதேசங் கேட்டுக்கொண்ட வரலாற்றை, திருப்புகழமிர்தம் மலர் 2, பக்கம் 69-ல் காண்க.

இருசெவிமீதிலும் :—

பிரணவப் பொருள் வாய்விட்டு சொல்லவொண்ணாதது ; ஆதலால் சிவபெருமான் கல்லாலின்கீழ் நால்வருக்கும் தமது செங்கரத்தால் சின்முத்திரையைக்காட்டி உபதேசித்தார் ; ஆனால், அறுமுகச்சிவனார் அவ்வாறு சின்முத்திரையைக்காட்டி உணர்த்தியதோடு வாய்விட்டும் இனிதுகூறி உபதேசித்தருளினார்.

அரவு புனைதரு புனிதரும் வழிபட
மழலை மொழிகொடு தெளிதர ஒளிதிகழ்
அறிவை அறிவது பொருளென அருளிய பெருமாளே.

அவ்வாறு கூறிய அமுதமொழி இரண்டு செவிகளிலும் நிரம்பியது என்பது பொருள்.

சிவகாம சுந்தரிதன் வரபால :—

சிவகாமசௌந்தரிக்கு மிகவும் அன்புடைய குழந்தை முருகப்பெருமான். "கச்சித்தாய் உச்சியை மோந்து கண்ணோடணைக்குந் திருத்தாளா" என்ற சிதம்பரசுவாமிகள் திருவாக்கும் "ஓம் பார்வதீ ப்ரியநந்தனாய நம:" என்ற திருமந்திரத்தாலும் விளங்குகின்றதல்லவா ?

நினைசெயலே விரும்பியுள நினையாமல் :—

திருவாலயத்திற்குச் செல்லுங் காலங்களிலும், ஓய்வுபெற்றுத் தனித்திருக்கும் சமயங்களிலும், மனதில் உலக விவகாரங்களைக் கொண்டுவிட்டு பற்பல எண்ணங்களை எண்ணி நெஞ்சம் புண்ணாகாமல், எம்பெருமானுடைய திருவருட்பெருக்கால் செய்தருளிய திருவிளையாடல்களின் பெருமைகளையும், அதன் தத்துவங்களையும், அவருடைய திருவடியையடையும் செந்நெறியையும், அடியார்க்கு ஆண்டவர் எளிதில்வந்து இன்னருள்செய்யும் பெருங் கருணைத்திறத்தையும் எண்ணி எண்ணி இன்புறவேண்டும். இங்ஙனம் எண்ணுந் தன்மையுடையார் மனதில் தீய எண்ணங்கள் அணுத்துணையும் இருப்பதற்கு இடமில்லை,

"சிந்தனை நின் தனக்காக்கி"

—மணிவாசகனார்.

"நினைக்க மடநேஞ்சும்"

—அப்பர்.

அவமாயைகோண்டு . . . . . உழலும் :—

"மகமாயை களைந்திட வல்லபிரா" னுடைய அருட்செயல்களை விரும்பி நினையாமையால் உலகை பசுபாச தொந்தங்களாகிய படுமாயையிற் சிக்கி, அப்பாழ்த்த படுகுழியில் வீழ்ந்து உய்யும் நெறியுணராது பன்னெடுங்காலமாக உழன்றுகொண்டு வருகின்றோம்.

"மாலாசை கோபம் ஓயாதே னாளும்
மாயா விகார வழியே சேல்
மாபாவி காளி"

—திருப்புகழ்.

நவநீதமுந் திருடி :—

கண்ணபிரான் அருந்தவம்புரிந்து ஆய்ச்சியராகவந்து தன்னையே நினைந்துருகும் கோபிகைகள் மனைதொறுஞ்சென்று அவர்களுடைய "அமலமாகிய சிந்தையில்" "உறவுக்கோல்நட்டு உணர்வுக்கயிற்றினால் முறுகி வாங்கிக் கடைய முன்னின்ற" அன்பின் முதிர்ச்சியாகிய வெண்ணெயை உண்டார். திருவிளையாடல் காரணமாகவும், மருதமரமாக நின்ற கந்தருவர்களின் சாபத்தைத் தொலைத்தருளும் பொருட்டாகவும், தாயார் அன்பெனும் கயிற்றைக்கொண்டு திடஞானமென்னும் உரலில் கட்டக் கட்டுப்பட்டார்.

"இடையர் மனை தோறுநித்த முறிதயிர் நெய் பால் குடிக்க
இருகையுற வேபிடித்து உரலோடே
இறுகிட அசோதை கட்ட அழுதிடு கோபால கிருஷ்ண
னியல் மருகனே குறத்தி மணவாளா"

—(நடையுடையி) திருப்புகழ்.

நவலோகமுங் கைதோழ :—

மூவர்க்குந் தேவர்க்கும் யாவர்க்கும் முழுமுதற்கடவுள் முருகப்பெருமானேயாதலால் அப்பரமபதியை நவகண்டங்களில் வாழும் ஆன்மகோடிகள் அனைவரும் கைகூப்பித் தொழுது வழிபடுகிறார்கள்.

"பதினாலு லகத்தினி லுற்றுறு பக்தர்கள்
ஏது நினைத்தது மேத்த அளித்தருள் இளையோனே"
"ஜகந்தோழுஞ் சரவணப் பேருமாளே"

—திருப்புகழ்.

நவகண்டங்களாவன :—

பரதகண்டம், குருகண்டம், கிம்புருடகண்டம், இளாவிருதகண்டம், அருவருட கண்டம், கேதுமால கண்டம், இரமிய கண்டம், பத்திராசுவ கண்டம், இரணிய கண்டம் என்பனவாம்.

நிசதேவ :—

முருகப்பெருமான் என்றும் ஒருபடித்தாக நித்தியமாக விளங்குபவர். செத்துப்பிறக்கின்ற பிறதெய்வங்களைப்போலல்லாது, பிறவாமலும், இறவாமலும், மூவாமலும் இருக்கும் தனிப்பெருந்தலைவர்.

" என்று மகலாத இளமைக்கார "

—திருப்புகழ்.

" பெம்மான் முருகன் பிறவா னிறவான் "

—அனுபூதி.

" என்றும் இளையா யழகியாய் "

—நக்கீரர்.

" செத்துப்பிறக்கின்ற தெய்வங்கள் மணவாளா
சேங்கீரை யாடி யருளே "

—குமரகுருபரர்.

நலமான விஞ்சை கருவிளை கோவே :—

சகல கலைகளும் முருகப்பெருமானிடத்திலிருந்தே தோன்றின; வேதாகமங்களும் அப்பெருமானுடைய திருமுகங்களி னின்றும் தோன்றினவே ; அதனால் அருணகிரியார் அப்பெருமானைப் பின்வருமாறு துதிக்கின்றார்.

" வேதாகம ஞானவிநோத "

—அனுபூதி.

" கல்லசல மங்கை யெல்லையில் விரிந்த
கல்வி கரைகண்ட புலவோனே "
" சகல கலை முழுதும் வல பெருமாளே "

—திருப்புகழ்,

சவுந்தரிக :—

ஆயிரங்கோடி மன்மதர்கள் ஒருங்கு கூடினும் எந்தை கந்தவேள் திருவடியழகுக்கு இணையாகாது. முழுது மழகிய பெருமாளாகிய அத்தெய்வமே அழகுக்கு உறைவிடம்; அவரே அழகுக்குப் பிறப்பிடம்.

ஆயிரங் கோடி காமர் அழகெலாந் திரண்டோன் ருகி
மேயின வேனினுஞ் செவ்வேள் விமலமாஞ் சரணந் தன்னிற்
றூயநல் லெழிலுக் காற்ரு தென்றிடி னிணைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம் உவமையார் வகுக்க வல்லார்.

—முதல்வன் புராணம்.

திருவாவினன்குடி :—

பழநிமலையின் அடிவாரத்திலுள்ள கோயில் "திருவாவினன் குடி" யாகும். திரு - இலக்குமி, ஆ - காமதேனு, இனன் - சூரியன், கு - பூமி, டி - அக்கினி எனவே இந்த ஐவரும் பூசித்த கோயில் என்பர்.

ஜெகமேல் மெய்கண்ட விறல் பெருமாளே :—

சுப்ரமண்ய சாரூபம்பெற்ற அபர சுப்பிரமணியர்களில் ஒருவர் சுப்ரமண்ய பரப்பிரமத்தின் திருவருள் தாங்கி திருஞானசம்பந்தராகத்தோன்றி, திருமயிலையிலே, எலும்பைப் பெண்ணுக்குங் காலத்து, உலகில் பிறந்தார்கள் பெறும் பயன்களாவன; மதி சூடும் மணிமிடற்றண்ணலினது அடியாருக்கு, அன்னமளித்து உபசரித்தலும், அக்கண்ணுதற் கடவுள் அடியார்பொருட்டு எழுந்தருளி வரும், நல்விழாவை அன்புடன் தெரிசித்தலுமேயாம்- பிறவியின் பயன்கள் இவ்விரண்டுமே என்பது உண்மையேல் நீ உலகர்முன் உயிர்பெற்றெழுக" என்று சொல்லி உண்மையைக் கண்டுரைத்து பெண்ணாகச்செய்த அற்புத அருட்செயலையுங் குறிப்பாக உணர்த்தும்.

மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதி சூடும்
அண்ணலா ரடியார் தமை யமுது செய்வித்தல்
கண்ணினு லவர் நல்விழாப் பொலிவு கொண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வருகென உரைத்தார்.

—பெரிய புராணம்.

கருத்துரை.

பரசிவகுருவே! மலைமகள் மைந்த! கந்த! மால் மருக! மெய்த் தெய்வமே! கலாதிப! கஜவல்லி வனவல்லி மணாள! கதிர்வேல! திருவாவினன்குடியில் வாழ்பவ! தேவரீரது அருட்டிறத்தையுன்னாது அவமாயைகொண்டுழலும் அடியேனை அஞ்சேலென்று அருளி அருள் ஞான இன்பத்தைக் கொடுத்து ஆண்டுகொள்வீர்.

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

॥ शिवानन्दलहरी ॥

சிவானந்த லஹரீ

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது)

(144-வது பக்கத் தொடர்ச்சி)

विरिञ्चिर्दीर्घायुर्भवतु भवता तत्परशिर-
श्चतुष्कं संरक्ष्यं स खलु भुवि दैन्यं लिखितवान् ।
विचारः को वा मां विशद कृपया पाति शिव ते
कटाक्षव्यापारः स्वयमपि च दीनावनपरः ॥ १६ ॥

(16) விரிஞ்சிர் தீர்காயுர் பவது பவதா தத்பரசிர–
ச்சதுஷ்கம் ஸம்ரக்ஷ்யம் ஸ கலு புவி தைன்யம் லிகிதவான் ।
விசார: கோ வா மாம் விசத க்ருபயா பாதி சிவதே
கடாக்ஷவ்யாபார: ஸ்வயமபி ச தீநாவநபர: ॥

பதவுரை.

விசத - நிர்மல சொரூபரே!
சிவ - மங்கலமூர்த்தியே!
விரிஞ்சி: - பிரமன்,
தீர்க்காயு: - நீடித்த ஆயுளையுடையவன்,
பவது - ஆகட்டும்,
தத்பரசிரச்சதுஷ்கம் - அவனதுவேறு தலைகள் நான்கும்,
பவதா - தேவரீரால்,
ஸம்ரக்ஷ்யம் - நன்றாகக் காக்கப்படத்தக்கவைகளாக ஆகட்டும் (ஏனென்றால்)
ஸ: - அந்தப்பிரமன்,
புவி - பூவுலகில்,
தைந்யம் - ஏழ்மைத் தன்மையை (என் தலையில்)
லிகிதவான்கலு - எழுதினவனல்லவா?
தீநாவநபர: - எளியவர்களைக் காப்பாற்றுவதில் ஆவலுடையதான,
தே - தேவரீருடைய,
கடாக்ஷவ்யாபார: - கடைக்கண் பார்வையின் செயலானது,
ஸ்வயமபி - தானே,
மாம் - அடியேனை,
பாதி - காப்பாற்றுகிறது (ஆதலால்),
விசார: - விசாரமானது,
கோவா: - ஒன்றுமில்லை,

பொழிப்புரை.

நிருமலசொரூபியே! சிவபெருமானே! பிரமதேவன் நீண்ட ஆயுளுடன் வாழக்கடவன்; தேவரீரால் கிள்ளியெறியப்பட்ட தலை போக, நின்ற தலைகள் நான்கும் காக்கப்படுவன ஆகுக. இப்படிப் பிரார்த்திக்கக்காரணம் யாதெனில்? அப்பிரமன் ஏழைமைத்தனத்தை மனிதர்களின் தலையிலெழுதுவதினாலும், உம்முடைய கடைக்கண் பார்வை ஏழைகளைக்காப்பதில் விருப்பமுடையதாதலினாலும், அடியேனை அவசியம் காப்பாற்றும்; அடியேனுக்கு யாதும் கவலையில்லை.

சிவபெருமானுடைய கடைக்கண்ணோக்க மேற்பட்டுவிட்டால் அயன்விதி ஒன்றும் செய்யமுடியாது.

"கருவேந்துவீழக் கடைக்கணித்து" —திருவாசகம்.

"நின்னருட் கண்ணால் நோக்காதார் அல்லாதாரே" —தேவாரம்.

फलाद्वा पुण्यानां मयि करुणया वा त्वयि विभो
प्रसन्नेऽपि स्वामिन् भवदमलपादाब्जयुगलम् ।
कथं पश्येयं मां स्थगयति नमःसंभ्रमजुषां
निलिम्पानां श्रेणिर्निजकनकमाणिक्यमकुटैः ॥ १७ ॥

(17) பலாத்வா புண்யானாம் மயி கருணயா வாத்வயி விபோ
ப்ரஸன்னேऽபி ஸ்வாமின் பவதமல பாதாப்ஜயுகளம் ।
கதம் பச்யேயம் மாம் ஸ்தகயதி நம: ஸம்ப்ரம ஜுஷாம்
நிலிம்பானாம் ச்ரேணிர்நிஜகனக மாணிக்ய மகுடை: ॥

பதவுரை.

விபோ - எங்கும் நிறைந்தவரே!
ஸ்வாமி - எல்லாவற்றையும் சொத்தாகவுடையவரே!
புண்யானாம் - புண்ணியங்களுடைய (நற்செயல்களுடைய),
பலாத்வா - பிரயோஜனத்தினாலாவது,
மயி - அடியேனிடத்தில்,
கருணயாவா - தயவினாலாவது,
த்வயி - தேவரீர்,
ப்ரஸன்னேபி - கண்ணுக்கெதிரே தோன்றி திருவருள் செய்கின்றவரா யிருந்தபோதிலும்,
பவதமல பாதாப்ஜ யுகளம் - தேவரீருடைய அழுக்கற்ற திருவடித் தாமரைகளிரண்டையும்,

கதம் - எப்படி,
பச்யேயம் - அடியேன் பார்ப்பேன்,
நம: ஸம்ப்ரமஜ்ஞஷாம் - வணக்கஞ் செய்வதில் பரபரப்பை யடைந்தவர்களான,
நிலிம்பாநாம் - தேவர்களுடைய,
ச்ரேணி: - கூட்டமானது,
நிஜகனக மாணிக்யமகுடை: - தங்கத்தினுற் செய்யப்பட்ட தங்களுடைய மாணிக்க மகுடங்களினுலே,
மாம் - அடியேனை,
ஸ்தகயதி - மறைக்கும்படிச் செய்கிறது.

பொழிப்புரை.

ஈச்வரா! அடியேன் செய்த நல்வினைப்பயனுலோ? தேவரீருடைய பெருங்கருணையினுலோ, தேவரீருடைய திருவருளை அடியேன் பெற்றும், உமது இரண்டு சாணுரவிந்தங்களை அடியேன் தெரிசிக்கப் பெற்றேனில்லை ஏனெனில், உம்மை வணங்குவதில் மிக்க விரைவையுடைய தேவர்கள் தமது மணிமயமான மகுடங்களால் அடியேனைத் தடுத்துவிடுகின்றுர்களோ?

மாலயனுதி வானவர் குழாங்கள் சிவசந்நிதியில் நெருங்கியிருப்பதால் எண்டோளெந்தையாரது இணையடி மலர்களின் தெரிசனம் எளிதில் கிடைத்திலது என்றுர்.

"அருமறை யவன்முதல் அரிபரன் மகபதி
அநங்க னிமையோர் இனங்கள் ஒருபால்
மடல்புனை புகரோடு வருபதி னுருவரு
மருங்கி னுறவே நெருங்க ஒருபால்"

त्वमेको लोकानां परमफलदो दिव्यपदवीं
वहन्तस्त्वन्मूलां पुनरपि भजन्ते हरिमुखाः।
कियद्वा दाक्षिण्यं तव शिव मदाशा च कियती
कदा वा मद्रक्षां वहसि करुणापूरितदृशा ॥ १८ ॥

(18) த்வமேகோ லோகாநாம் பரமபலதோ திவ்யபதவீம்
வஹந்தஸ்த்வந் மூலாம் புநரபி பஜந்தே ஹரிமுஹாம்।
கி யத்வா தாக்ஷிண்யம் தவ சிவ மதாசா ச கியதீ
கதா வா மத்ரக்ஷாம் வஹஸி கருணுபூரித த்ருசா ॥

பதவுரை.

சிவ	- சிவபெருமானே!
லோகாநாம்	- ஜனங்களுக்கு,
பரமபலத:	- உயர்ந்தவையான, (மோக்ஷம் முதலிய) பயன்களையருள்பவர்,
த்வம்	- நீர்,
ஏகம்	- ஒருவரே,
ஹரிமுகாம்	- திருமால் முதலிய தேவர்கள்,
த்வந்மூலாந்	- தேவரீரையே காரணமாக உடையதான, (தேவரீரால் கொடுக்கப்பட்டதான)
திவ்யபதவீம்	- சிறந்த (வைகுண்டம் முதலிய) இருப்பிடங்களை,
வஹந்த	- வகிக்கிறவர்களாகி,
புநரபி	- மறுபடியும்,
பஜந்தே	- (தேவரீரையே) சேவிக்கிருர்கள்,
தவ	- உம்முடைய,
தாக்ஷிண்யம்	- தாக்ஷிண்யமானது (கண்ணேட்டம்) (பிறருடைய நன்மையையே முக்கியமாகச் செய்யுந் தன்மையானது,)
கியத்வா	- எவ்வளவு? (அளவிற்கு அடங்காதது),
மதாசாச	- அடியேனுடைய ஆசையும்,
கியதி	- எவ்வளவு? (இதுவும் அளவிற்கு அடங்காதது),
மத்யக்ஷாம்	- அடியேனைக் காப்பாற்றுதலே,
கருணாபூரித த்ருசா	- தயவினால் நிறைக்கப்பட்ட கண் பார்வையினால்,
கதா	- எப்போது,
வஹஸி	- வகிப்பாய்(பார்ப்பாய்).

பொழிப்புரை.

சிவபெருமானே! ஆன்மாக்களுக்கு கோரியபலன்களை வழங்குபவர் தேவரீர் ஒருவரே! நாராயணர் முதலிய தேவர்கள் அனைவரும் தேவரீரால் கொடுக்கப்பட்ட வைகுண்டாதி பதவிகளைப்பெற்று மறுபடியும் தேவரீரையே சேவிக்கிருர்கள். உம்முடைய தாக்ஷிண்யத்திற்கு அளவேது? அடியேனுடைய ஆசைக்கும் அளவேது? ஆதலின், எப்பொழுதும் அடியேன்மீது கடைக்கண்பார்வை வைத்தருள்வீராக.

" கண்பாா் ஐயா திருவையாறு " —திருவெண்காடர்.

(தொடரும்.)

உ

ஓம் குஹாய நம:

கந்தர் திருவிளையாடல்

(150-வது பக்கத் தொடர்ச்சி)

தாருகற்செற்ற தனிவேலண்ணல் போர்க்களத்தை யகன்று, தேவர்களும், பூதர்களும், வீரர்களும், துதிக்கவந்து, அங்கு நின்ற இமயவெற்பைக்கடந்து, தென்திசையில் நடந்து, கதிரவன் மேற்கடலில் மூழ்கும்பொழுது, தேவகிரியை அடைந்தார். ஆங்கு, நாரணனும் ஆரணனும் வாரணனும் தேவர்களும் செவ்வேட் பரமன்து செம்மலர் நோன்றாட் கமலங்களைச் சென்னிபொருந்தப் பணிந்து "பெருங் கருணைத்தடங்கடலே! தாரகனுடைய கோரச்செயலால் அடியேங்கள் இந்நாள்வரை மிகவுந் துன்புற்றேம்; எம்மாட்டுள்ள பெருங்கருணையினாலே, அத்தாருகப்பதகனைக் கிரௌஞ்சகிரியோடு தொலைத்தருளினீர்; தேவரீரைப் பூசிக்க விழைவுற்றேம்; இம்மலையில் எழுந்தருளியிருத்தல்வேண்டும்; இவ்வரந்தருக" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். அருட்பெருங்கடலாகிய அறுமுகச்சிவனார் அவ்வேண்டுகோளுக்கு இசைந்தருள, இமையவர்கள் அதுகண்டு, உடல் பூரித்து, உரோமஞ் சிலிர்த்து, துள்ளிப் பேருவகைப் பெருங்கடலில் மூழ்கினார்கள். குமாரக்கடவுள் சேனைகளோடும் தேவர்களோடும் தேவகிரிமேற் சென்று, தம்மைத்தொழுதுகொண்டு, தமது அருகில் வந்த தேவதச்சனை நோக்கி, "நாமும், நம்முடைய தம்பியர்களும், தேவர்களும், கணங்களும் இருக்கும்பொருட்டு, இம்மலையின்கண்ணே, ஒரு நகரத்தை இப்பொழுதே விரைவில் உண்டாக்கக்கடவாய்" என்று பணித்தருளினார். தேவதச்சன், "சுவாமி! அவ்வாறே செய்வேன்" என்று விண்ணப்பஞ்செய்து, திருவடிகளைத் தொழுதுபோய், அவ்விடத்தே ஒருபெரிய நகரத்தையும், அதனுள்ளே எம்பெருமான் எழுந்தருளும்பொருட்டு ஒரு செம்பொற் றிருக்கோயிலையும், அதனுள்ளே ஒரு இரத்தின சிங்காசனத்தையும் செய்துமுடித்துக்கொண்டு, பெருமானிடம் வந்து விண்ணப்பஞ்செய்தான்.

கந்தப்பெருமான் தம்மைச்சூழ்ந்த யாவரோடும் அத்திருநகரத்துட்சென்று, பூதசேனைகளைத் திருக்கோயிற் றிருவீதியிலே நிறுவி,

தேரினின்றும் இறங்கி, செம்பொற் பாதுகைகளிலே தமது மறைக்கு மெட்டாத மலரடியைவைத்து, வீரர்களும் தேவர்களும்சூழ, திருக் கோயிலினுள்ளேபுகுந்து, சூரியர்கள்யாவரும் ஒன்றுகூடினாற்போலப் பேரொளிவீசும் மணித்தவிசின்மேல் எழுந்தருளியிருந்தார். அப்பொழுது திருமால் முதலிய தேவர்கள் யாவரும் எம்பெருமானைப் பூசிக்க நினைந்து, உமாதேவியாருடைய திருக்கரத்தில் தோன்றிய கங்கையை நினைக்க, அஃது ஆங்குவந்தது; பின்னர், இரத்தினாபரணம், செம்பட்டாடை, நறுமலர், சந்தனம், தூபம், தீபம் முதலிய பூசைக்கு வேண்டியவைகளை அங்கு வருவித்தார்கள்; முன்னே அமுதம்வைத்த குடங்களைக் கொணர்ந்து, வேதங்களைச் சொல்லி கங்கையிலே திருமஞ்சனமெடுத்தார்கள்; பிரமதேவர் முதலிய தேவர்களும் முனிவர்களும் ஷண்முகக்கடவுள் பக்கத்தையடைந்து, அவருடைய மந்திரத்தைச்சொல்லித் திருமஞ்சனமாட்டினார்கள்; அதன்பின், முன்னேதரித்த பீதாம்பரத்தை நீக்கி, வேறு பீதாம்பரஞ்சாத்தி வேறொரு சிங்காசனத்தில் எழுந்தருளியிருக்கச்செய்து, அவருடைய திருநாமத்தைச் சொல்லி நறுமலர்சாத்தி, திருமாலைகளைச்சூட்டி, சந்தனக்குழம்பையணிந்து, பச்சைக்கற்பூரத்தையப்பி, கஸ்தூரி திலகம் வைத்து, திருமேனியெங்கும் திவ்வியாபரணங்களைச் சாத்தி, மணியொலியோடு தூப தீபங்காட்டி, மெய்யன்போடு வலஞ்செய்து வணங்கித் துதித்தார்கள். தேவர்கள் எல்லோருங்கூடி இவ்வாறு பூசிப்ப, அறுமுகக்கடவுள் அளப்பருங்கருணையினாலே அதனை ஏற்றுக்கொண்டு அங்கெழுந்தருளியிருந்தார்.

தாரகன் இறந்த செய்தியை சில தூதர்கள்போய்ச் சொல்ல, அவனுடைய மனைவியாகிய சௌரி இடியைக்கேட்ட நாகம்போல் நடுங்கி. ஓவென்று கதறியழுது சென்று தன் கணவன்மேல் விழுந்து பற்பலவாறு புலம்பியழுதாள். மற்றை மனைவியர்களும்வந்து நெருங்கித் தாரகனைச்சுற்றிப் புலம்பினார்கள். அக்காலை தாரகன் புதல்வனாகிய அசுரேந்திரன் சிங்கமுகனுடைய நகரமாகிய ஆசுரம்போயிருந்தான். பிதாவின் மரணத்தைக்கேட்டு வந்து, பிதாவின்மேல் விழுந்து அழுதான்; தகனகிரியைச்செய்ய, தாரகன் மனைவியர் அனைவரும் உடன்கட்டை ஏறினார்கள்; அசுரேந்திரன் மிகவும் வருந்தி, தன் கிளைஞர்சூழ அந்நகரத்தை நீங்கி தென்கடலிலுள்ள வீரமகேந்திரபுரியையடைந்து சூரபன்மனைவணங்கி, தாரகனை குமாரக்கடவுள் கொன்ற செய்தியைக்கூறி புலம்பினான். சூரபன்மன் கேட்டு அடங்காத சின

மும், அற்புதமும், அளப்பருந்துன்பமுங்கொண்டு கதறியழுதான். உடனே குமாரக்கடவுள்மீது போர்புரிய எழுந்தான். அப்பொழுது அமோகன் என்ற மந்திரி "அசுரேச! சாம தான பேதமென்ற உபாயங்களைப்புரியாமுன் போருக்குப் புறப்படுதல் முறையன்று; ஆராயாது ஒரு கருமம் செய்யக்கூடாது; பகைவர் வலியை ஒற்றால் அறிந்தபின்னரே தக்கதை ஆராய்ந்து செய்யவேண்டும்; மேலும் நினக்குப்பயந்திருந்த தேவர்மீதும், நேற்றுப்பிறந்த குழந்தைமீதும் தாங்கள் போருக்குப்போவது பழிப்புக்கிடமாகும்" என்று தடுத்தான். சூரபன்மன், "நன்று" என்று கூறி, "பகன், மயூரன், சேனன், சக்ரவாகன், சுகன் முதலியவர்களை யழைத்து, "கந்தவேளுடைய இயல்பையும் அவனது சேனையின் தொகையையும் ஆராய்ந்து வாருங்கள்" என்று பணித்து விடுத்தான். அவர்கள் சென்றபின் சூரபன்மன் அசுரர் துதிப்ப அரசுசெய்தான்.

தேவகிரியில் எழுந்தருளியிருந்த செவ்வேட் பரமன், கதிரவனுதித்தபின், தேவர்களும் சேனைகளும் சூழத் தென்றிசை நோக்கிச் சென்றார். இமயவல்லி இடப்பாகம்பெற விரும்பிப்பூசித்த திருக்கேதாரத்தைத் தெரிசித்தார். சிவமூர்த்தியே பரம்பொருள் என்பதை வியாசமுனிவர் கையே தெளிவித்த காசியம்பதியைத் தரிசித்தார்; திருநந்திதேவரே சிவபெருமானைத் தாங்கும்பொருட்டு தவஞ்செய்து மலையாகிப் பரமேச்வரரைத் தாங்கிய திருப்பருப்பதத்தைத் தரிசித்தார்; உமாதேவியாருக்கு முனிந்து பாதாளத்திற்சென்று குகைவழியே முன்னே தாம் வந்ததும் புட்கரணிதீரத்திலே திருமால் முதலிய தேவர்கள் தம்மைப் பூசித்ததுமாகிய திருவேங்கிட மலையைப் பார்த்தார்; சிலந்தியும் பாம்பும் யானையும் சிவகோசரியாரும் கண்ணப்ப நாயனாரும் நக்கீரதேவரும் கன்னியரும் முத்தியடைந்த தெக்கிண கைலாசமாகிய திருக்காளத்திமலையைத் தரிசித்தார்; இவ்வுலகை யழிக்க எழுந்த காளியையடக்கக் கண்ணுதற்பெருமான் ஆடல்புரிந்த திருவாலங்காட்டைத் தரிசித்தார்; ஊழிகாலத்தும் அழிவில்லாததாய் மாலயன் முதலிய வானவர்கட்கு உறையுளாய், மணிமிடற்றண்ணல் மாமரநிழலில் எழுந்தருள்வதாயுள்ள திருக்காஞ்சி நகரத்தைத் தரிசித்தார்; அங்கே காமாக்ஷியம்மையார் பூசித்த திருவேகம்பத்தையும், அயனரியாதியமரர்கள் பூசித்த மற்றையாலயங்களையுந் தரிசித்தார்; "யானே பரம்பொருள், யானே பரம்பொருள்" என்று நாரணனும் நான்முகனும் இகலும்பொழுது அவர்கள்நடுவே தோன்றி, அவர்க

ளால் அடிமுடியறிதற்கரிதாய், வழிபடுவோர்க்கு முத்தியைத்தரவல்ல தாய் விளங்கும் திருவண்ணுமலையைத் தரிசித்தார்; விரிசடைவிமலன் விருத்தவேதியராய்ச்சென்று ஆவணஓலைகாட்டி வழக்கில் வென்று திருமணத்தை விலக்கி ஆரூரரை அடிமைகொண்டருளிய திருவெண்ணெய்நல்லூரைத் தரிசித்தார்; உமாதேவியார் புடவையால்வீசச் சிவபெருமான் தமது திருத்தொடையின்மேற் கிடத்தி இறந்த உயிர்கட்கெல்லாம் திருவைந்தெழுத்தி னுண்மையை உபதேசித்துத் தமது சாரூப்யத்தைக் கொடுத்தருளு மியல்பினலே காசியையொத்த விருத்தாசலத்தைத் தரிசித்தார்; பதஞ்சலி வியாக்கிரபாதர் தரிசிக்கும் பொருட்டு சிற்பரவியோமத்திலே சிவபெருமான் எல்லையில்லாத பெருங்கருணையோடு ஆனந்தத்தாண்டவம் புரிந்தருளும் திருத்தில்லையம்பதியைத் தரிசித்தார்; அகத்தியருடைய கமண்டலத்தினின்றும் பெருகி வேறுவேருய்ப் பிரிந்து பற்பல பெயர்களைத்தாங்கிச் செல்லுங் காவேரியாற்றின் வடகறையிலுள்ள மண்ணியாற்றங்கரையை அடைந்தார்.

ஆதித்தன் தன்கிரணங்களை யொடுக்கிக்கொண்டு அத்தமயமானன். பிரமாவிட்டுணு முதலியதேவர்கள் குமாரக்கடவுளை வணங்கி, "எம்பெருமானே! இவ்வாற்றங்கரையெல்லாம் மணற்குன்றுகள் மலிந்தன; மலர்வனங்கள் நிறைந்தன; சிவதலங்கள் எண்ணிலாதன இருக்கின்றன. ஆதலால், இந்நதிக்கரையில் இருந்தருளுக" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். அதுகேட்ட ஆறுமுகவள்ளல் தேவதச்சனை யழைத்து ஆங்கு அழகிய நகரமொன்று உண்டாக்குமாறு பணித்தருளினர். உடனே தேவதச்சன் மனத்தினுல் நினைத்து அம்மண்ணியாற்றங்கரையில் கவினுறையுந் திருநகரைச்செய்து, பெருமானுக்குத் தெரிவித்தான். கந்தக்கடவுள் தேவருடன் அந்நகரினுள் சென்று அதன் வளப்பத்தைக்கண்டு, "நாம் தங்குதற்கு இது நல்ல நகரம்" என்று திருவாய்மலர்ந்தருளினர். தேவர்கள் அந்நகருக்கு *"திருச்சேய்ஞலூர்" எனப்பெயரிட்டார்கள். வேலாயுதக்கடவுள் தம்பியரும் பூதசேனையும் தேவரும் சூழச்சென்று திருக்கோயிலில் எழுந்தருளியிருந்தார். ஏனையதேவர்கள் பெருமான் விடைதர கோயிலுக்குப்புறம்பேதமக்கு அமைத்துள்ள இருக்கைகளை யடைந்தார்கள்.

தாரகன் இறந்ததை எண்ணி இந்திரன் மகிழ்ந்திருந்தான். அக்காலை, சீர்காழியிலுள்ள வனதேவதை இந்திரனை வந்து வணங்கி,

*வடமொழியில் குமாரபுரி எனப்படும்.

ஆபரணக்கிழியைத்தந்து, "தேவர்கோமானே! நீ இந்திராணியுடன் சீர்காழியில் தவஞ்செய்தபோது என்னிடம் வைத்த ஆபரணக்கிழி இது; ஏற்றுக்கொள்க என்றது. இந்திரன் அதனையவிழ்த்து தன் மனைவியின் ஆபரணங்களைக்கண்டு, அவளை நினைந்து காமநோய் கொண்டு மிகவும் வருந்தினன். வனதேவதைக்கு விடைதந்து, அதனை சேமித்துவைக்கப் பரிசனருக்குக்கட்டளையிட்டான். ஒரு மணற்குன் றின்மீது இருந்து விரகவேதனைப்பட்டான். சூரியோதயமாக, இந்தி ரன் காமந்தணிந்து,

> தீமையுள்ளன யாவையுந் தந்திடுஞ் சிறப்புந்
> தோயில் செல்வமுங் கெடுக்குநல் லுணர்வினைத் தொலைக்கும்
> ஏம நன்னெறி தடுத்திரு ளுய்த்திடு மிதனுந்
> காமமின்றியே யொருபகை யுண்டுகொல் கருதில்.

என்று தெளிந்து, தேவர்கள் சூழச்சென்று குகசந்நிதியை யடைந்து பலமுறை வணங்கித்துதித்து நின்றான்.

இளம்பூரணராம் எந்தை கந்தவேள் இந்திரனைநோக்கி, "நாம் சிவபெருமானைப் பூசிக்க விரும்புகின்றோம்: பூசோபகரணங்களை வருவிக்கக்கடவாய்" என்று பணித்தருளினர். உடனே இந்திரன், பலரையேவி, திருமஞ்சனம், நறுமலர், பீதாம்பரம், சந்தனம், திரு வமுது, தூபம், தீபம் முதலியவைகளை வருவித்தான். குகமூர்த்தி தேவதச்சனால் ஓர் திருக்கோயில் செய்வித்து, சிவாகமவிதிப்படி ஒரு சிவலிங்கத்தை எழுந்தருளப்புரிந்து, வழிபட்டு வலம்வந்து வணங்கித் துதித்தார். இமயவல்லியுடன் ஏண்டோளீசன் இடபமீது தோன்றி யருளினர். குமாரமூர்த்தி தந்தையாரையும் தாயாரையும் பணிந்து துதித்து நின்றார். வீரர்களும் பூதர்களும் தேவர்களும் கண்ணுதலைக் கண்டு மெய்புளகித்து கைதொழுது வாழ்த்தினர்கள். சிவபெருமான், திருமைந்தரை நோக்கி, "நின்வழிபாட்டிற்கு மகிழ்ந்தோம்; நீ இதனைப்பெறக்கடவாய்" என்று, உலக முழுவதை ஒரு நொடிக்குள் நீறுக்கும் சர்வ சங்காரப்படை யென்னும் உருத்திர பாசுபதப்படைக் கலத்தைக் கொடுத்து, "குமாரா! இது நம்மிடத்தே தோன்றியது; பிரம விட்டுணுக்களும் பெற்றிலர். இதனைத் தாங்கவல்லார் யாவர்; சூரனுடைய அளப்பற்ற சேனைகளை யழிக்கும் பொருட்டு நீ இதனைக் கொள்ளக்கடவாய்" என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினர்.

கந்தக்கடவுள் அங்கிருந்து புறப்பட்டு தேவரும் பூதரும் வீரரும் சூழக் காவிரியைக்கடந்து, திருவிடைமருதூர், மாயூரம், திருப்பறிய

லூர், முதலிய சிவதலங்களைத் தரிசித்துக்கொண்டு, உலையிற்காய்ந்த இரும்புபோலும் மிக்க வெப்பத்தையுடைய பாலைவனத்திலே சென்றார். செல்லலும் அக்கொடிய பாலைவனம் நறுமலர்ச்சோலைபோல் குளிர்ச்சியுடைத்தாயிற்று. அவ்வாறு ஆறுமுகக்கடவுள் செல்லும்போது, திருப்பரங்குன்றிலே தவஞ்செய்துகொண்டிருந்த பாராசர முனிவருடைய புதல்வர்களாகிய தத்தர், அநந்தர், நந்தி, சதுர்முகர், சக்கிரபாணி, மாலி, என்னும் அறுவரும் ஞானநோக்கத்தினாலே அதனை அறிந்து, எம்பெருமானுடைய திருவருளை நினைத்து, திருப்பரங்கிரியினின்று நீங்கி, வடதிசைநோக்கிவந்து கந்தவேள் கழலிணைக்கஞ்சங்களில் வீழ்ந்து வணங்கி, "எந்தையே! எளியேங்களைக் காத்தருள்க" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். அப்பொழுது இந்திரன் கந்தவேளை வணங்கி நின்று, "எம்பெருமானே! இவர்கள் பாராசரர் புத்திரர்கள்; இவர்களறுவரும் சிறுபருவத்தில் சரவணப்பொய்கையில் முழுகிக்கலக்கி அங்குள்ள மீன்களைக் கரையில் விடுத்து உலாவினர்கள். மத்தியானசந்தி முடிக்கவந்த பராசர் அதுகண்டு சினந்து, "பிள்ளைகாள்! நீங்கள் இப்பொய்கையில் மீன்களாகக்கடவது" என்று சபித்தார்; உடனே இவர்கள் மீன்களாகி அஞ்சி, "சாபம் நீங்குவது என்று" எனக்கேட்க, பாராசர், "ஆறுமுகப்பெருமான் இவ்வாவியில் எழுந்தருளி யிருக்கும்போது அவரை எடுக்கும் அகிலாண்டநாயகியின் திருமுலைப்பால் வெள்ளமாய்ப்பெருகும் அதனை நீங்கள் உண்ணும்போது முன்னையுருவத்தை யடைவீர்கள்" என்று கூறினர். மீன்வடிவத்தை யடைந்த இவ்வறுவரும் மயக்கம்பொருந்தி அளவற்றகாலம் சரவணத்திற்றிரிந்தார்கள். எந்தையே! நீர் சரவணதடாகத்தில் எழுந்தருளியிருத்தலும், எம்பெருமாட்டியார் கண்டு உம்மையெடுப்ப, அவருடைய திருமுலைகளினின்றும் சொரிந்தபால் வெள்ளமாய்ப் பெருகியது, அதனை இவர்கள் உண்டு மயக்கம் நீங்கி, முன்னை யுருவத்தையடைந்து, சிவாக்ஞையை மேற்கொண்டு திருப்பரங்குன்றத்திற் சென்று தவம்புரிந்துகொண்டிருந்தார்கள். இப்பொழுது எம்பெருமான் இங்கு எழுந்தருளுவதை அறிந்துவந்தார்கள்" என்று விண்ணப்பம் செய்தான். அறுமுகனர் அதுகேட்டு பாராசர் புதல்வரைக் கடைக்கணித்து, "நீங்கள் நம்முடன் வாருங்கள்" என்று திருவாய்மலர்ந்தருளினர். அவர்கள் "அண்ணலே! உம்மைச் சரணமடைந்தோம்" என்று வணங்கிச் செல்ல, சரவணபவனர் சுரத்தைக்கடந்து போயினர்.

சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருச்செங்குன்றூரைத் தரிசித்துக்கொண்டு, கடற்கரையிலுள்ள அலைவாயாகிய திருச்செந்தூரை அடைந்து தேவதச்சனைக்கொண்டு, ஒரு திருக்கோயில் செய்வித்து, தேரினின்றும் இறங்கி, கோயிலுட்புகுந்து, வீரர்களும் பூதசேனாதிபதிகளும் துதிப்ப மணியாசனத்தில் வீற்றிருந்தருளினர்.

பின்னர் குமாரக்கடவுள் இந்திரனைநோக்கி, "சூராதியவுணர்கள் பிறந்ததும், தவஞ்செய்ததும் வரம்பெற்றதும் அரசு செய்ததும் வீரமும், உங்களுக்கு இழைத்த தீமையுமாகிய எல்லாவற்றையும் நமக்குச் சொல்லக்கடவாய்" என்று பணித்தருளினர். இந்திரன் குருவாகிய பிருகற்பதியை நோக்கி, "நீர் இவைகளைச் சொல்லியருளும்" என்றான். வியாழபகவான் அதற்கியைந்து, குமாரவேள் குரைகழலைவணங்கி, "எம்பெருமானே! நீர் உயிர்கள்தோறும் செறிந்திருக்கின்றீர்; எப்பொருளையும் அறிவீர்; அடியேங்களுடைய அல்லலை நீக்கத் திருவுளங்கொண்டு பாலவடிவங்கொண்டருளினீர்; உமது செயலை அறியவல்லார் யாவர்? முன்னே எல்லையில்லாத புவனங்களும் மும்மூர்த்திகளும், உயிர்த்தொகைகளும் அடங்கிய விசுவரூபத்தைக்கொண்டு தோன்றியருளினீர்; உம்முடையமாயத்தை யாவர் அறியவல்லார்? அசுரர்தன்மையை நீர் வினவியது அதனை அறிதற்பொருட்டன்று; சிறியேங்களுடைய துன்பத்தைக்களைந்து இன்பத்தை நல்குதற்பொருட்டே. ஆகையால், அசுரர் தன்மைகள் அனைத்தையும் அடியேன் அறிந்தவாறே சொல்லுகின்றேன்" என்று சொல்லலுற்றார்.

(தொடரும்).

உபதேசம்.

உடம்பைப்பெற்றது எதற்கு? என்று ஒவ்வொருவரும் ஆராய்தல் வேண்டும். உடம்பிற்குள் உறையும் உத்தமனைக் காண்பதுவே உடம்பெடுத்ததன் பயனும். அப்பயனைப்பெறுதற்கு விரைந்து முயலவேண்டும். உடம்பிற்குள் உறைபவனைக் கண்டுபிடிக்க முயல்வதற்குமுன் திருக்கோயிலில் சென்று வழிபாடு செய்யவேண்டும். வெளிமுகத்திற்கண்ட கடவுளை உள்முகத்திற்கண்டு சிக்கெனப்பிடித்து தியான சமாதியில் சித்திரதீபம்போல் அசைவற்றிருக்கவேண்டும். அதுதான் உண்மையறிவானந்தம்.

உ

கார்த்திகேயன் துணை.

கற்பு

(157-வது பக்கத் தொடர்ச்சி)

இல்லறம் என்பது ஒரு கூட்டுவியாபாரப்போன்றது; நாயகனும் நாயகியும் கூடிச்செய்வது; இதில் பெரிய பொறுப்பு மனைவியிடத்திலேயே அமைந்துள்ளது; கணவனுக்குப் பொருளீட்டுகின்ற தொழில் ஒன்றேதான்; மனைவிக்கோ அப்பொருளைக் காப்பாற்றுவதெப்படி? எது முக்கியமான செலவு? எவ்வாறு குடும்பத்தை நடத்துவது? விருந்தினரை யுபசரித்தல் எப்படி? என்ற பலவிஷயங்கள் தெரிய வேண்டியது அவசியம். ஆதலால், பெண்மக்கள் இளமையிலிருந்தே தாய்தந்தைகளிடம் குடும்பதருமத்தைப் பயிலவேண்டும்; இல்லறத்தை செவ்வையாக நடத்துவதற்குப் பெண்கள் நன்றாகக் கல்வி கற்க வேண்டும்; கல்விகேள்விக ளில்லையானல் பெண்கள் கணவனிடம் நடந்துகொள்ளும் முறை, மாமன் மாமிகளிடம் நடந்துகொள்ளும் முறை, மக்களை வளர்க்கும் பண்பு, வருவாய்க்குத்தக்கபடி வகைப் படுத்தி குடும்பத்தை நடத்துமியல்பு முதலியவைகளை உணரமுடியாது. கல்வியில்லாப்பெண்கள் கண்மூடித்தனமாய் தங்கள் வாழ்க்கையை ஒழுங்காக நடத்தமுடியாது; வண்ணான்கணக்கு எழுதுவது, பால் தயிர் கணக்கு எழுதுவது முதலிய சிறு வேலைகளையெல்லாம் பெண்களே கவனித்தல்வேண்டும். அவ்வாறு கவனிப்பதற்குக் கல்வியில்லையானல் முடியாதல்லவா? ஆதலால் பெண்மக்கள் அவசியம் படித்தல் வேண்டும்; ஓய்வாக இருக்கும்போது, தமயந்தி, சந்திரமதி, நளாயனி முதலிய கற்பரசிகளின் சரிதங்களைப் படித்தல்வேண்டும்; பெண்குழந்தைகளை இளமையிலிருந்தே கற்பொழுக்கத்தைப் போதித்து இல்லறதருமத்தை நடத்தத் தயாராக்கவேண்டும்; வீரருடைய சரித்திரங்களையும், பக்தருடைய சரித்திரங்களையும் ஆண் மக்களுக்குப் படித்துக்காட்டி, "நீங்களும் இப்படி உலகம்போற்றும் உத்தமர்களாக விளங்கவேண்டும்" என்று உபதேசித்து அவர்களையும் பண்படுத்தவேண்டும். இவைகளுக்கெல்லாம் கல்வி இன்றியமையாததாக விளங்குகின்றதென்பதை சகோதரிகள் உணரவேண்டும். மாலை

நோத்தில் பெண்கள் தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திருவருட்பா முதலிய அருள்நூல்களை விளக்குமுன் பக்தியுடன் பாராயணம் பண்ணவேண்டும். தங்கள் பெண்குழந்தைகளையும் அப்படியே தங்கள் பக்கத்திலிருத்தி பாராயணம்பண்ணச்செய்யவேண்டும்.

வயிற்றின் கொடுமைக்காக வெளியிற்சென்று, உத்யோகம், வியாபாரம், விவசாயம்முதலிய பலதுறைகளில் உழைத்து ஓடியலைந்து உடலும் உள்ளமும் அயர்ந்து வாடிவரும் கணவன், வீட்டில் நுழைந்தவுடனே, அவைகளெல்லாவற்றையும் அவன்மறந்து இன்பமயமாய் களித்திருக்கச்செய்து, மறுநாள் அவன் வேலைக்கு வீட்டைவிட்டுப் போகும்வரை அவனுடைய மனதில் எந்த ஒருதுன்பத்தையும் புகுத்தவிடாதபடி சந்தோஷத்தை விளைவிக்கவேண்டும். கணவன் பலவகையாக உழைத்து அரிதில் தேடிக்கொண்டுவந்த செல்வத்தைப் பெண்கள் வீணே விழலுக்கு இறைக்காமல், எது அவசியம்? எது அநாவசியம்? என்று பகுத்துணர்ந்து செட்டாகக் குடும்பத்தை நடத்தவேண்டும். செட்டு இல்லாமறபடிக்கு வீண் டம்பங்களிற் செலவழிக்கும் பெண்டிர்வாழும் வீடு ஜீவகாருண்யமில்லாதான் செய்யும் தவம் போலவும், அரசனில்லாத நாடுபோலவும் முன்னேற்றத்தை யடையாது.

ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை

— திருக்குறள்.

என்றபடி, பணம் வரும்வழி பலவாயும், செலவழிக்கிறவழி சிலவாயுமிருந்தால்மட்டுமே இல்வாழ்க்கை வளம்பெறும்: இதையுணர்ந்து நடத்தப் பெண்களிடமிருக்கும் கல்வியறிவு ஒன்று நீங்கலாகக் கணவன் எத்துணைக் கல்விகேள்விச் செல்வமுடையவனுயினும் அவனுக்கு வீட்டில் சுகமென்பது மருந்திற்கும் கிடைக்கமாட்டாது பெருந்தன்மையுள்ள மனையிலுள்ள மனைவிகள் தங்களுக்குள்ள ஏற்றமெல்லாம் தங்கள் கணவன்மார்களினுலேதான் உண்டாகின்றன வென்பதை நன்குயறிந்துகொண்டு கணவரது நன்மைக்கென்று இரவும்பகலுமாக வருந்திப் படாதபாடுகளெல்லாம் படுவார்கள். உள்ளே கணவனிடத்தில் பகையும் வெறுப்புங்கொண்டு, வெளிக்கு மகாபதிவிரதையைப் போல் எல்லோருக்குக் தெரியும்படி டம்பத்திற்காகக் கணவனுக்குப் பணிவிடைசெய்வதில் பயனில்லை; ஒருத்தி கணவனிடம்அன்பாயிருப்பதையும் இராததையும் நொடிப்பொழுதிற்கண்டுகொள்ளலாம்; மனைவி

மாட்சிமைப்பட்டவளாயிருந்தால் ஒருவனுக்கு எது இல்லாதிருந்தாலும் எல்லாமிருப்பதுபோலவேயாகும்; அப்படிக்கின்றி மனைவி தீயவளாயிருக்கின் அவனுக்கு என்ன இருக்கும் பயனில்லை.

இல்லதேன் இல்லவள் மாண்பானல் உள்ளதேன்
இல்லவள் மாணுக் கடை

—திருக்குறள்.

கொழுநன் குடும்பபாரத்தைத் தாங்குதற்பொருட்டு வெளியே போய் எவ்வளவோ பாடுபட்டுத் தேடிக்கொண்டுவருவதைச் சிந்தாமலும் சிதறடிக்காமலும் சிரும்செட்டுமாய்ச் செலவழித்து கணவனிடம் தெய்வவிசுவாசத்துடன் இருப்பவளே உத்தம நாயகியாவள்.

எந்தக்காரியத்தைச் செய்யத்தொடங்கினும், கணவனும் மனைவியும் கலந்தே செய்யவேண்டும்; கணவன் மனைவியுடன் ஆலோசித்தும், மனைவி கணவனிடம் ஆலோசித்தும் பரஸ்பரம் ஒருவரையொருவர் ஆலோசித்து கருத்து வேற்றுமையின்றி வாழவேண்டும்; கருத்து வேற்றுமையுடைய குடும்பத்தில் அணுத்துணையாவது இன்பமுண்டாகாது. இரண்டுகண்களும் எப்படித் தங்களுக்குள் எந்தக்காலத்திலும் வேற்றுமையின்றி ஒன்றையே பார்க்குமோ அதுபோல் என்றறிக.

காதல் மனையாளுங் காதலனு மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்பவே—ஓதுகலை
எண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய் நோக்கறன்
கண்ணிரண்டு மொன்றையே காண்.

வாழ்வுவந்தாலும் தாழ்வுவந்தாலும் கணவனுடன் மகிழ்ச்சியுடன் உடம்பைவிட்டுப்பிரியாத நிழல்போல் இருந்து இன்சொல்கூறி இன்பத்தைக் கொடுக்கவேண்டும். கைப்பொருள் முழுவதும் மாதவியிடங்கொடுத்துவிட்டு வறுமைகொண்டு வந்த தன் கணவனுகிய கோவலனை பத்தினிக்கடவுளாகிய கண்ணகி கடிந்துரைக்காது எத்துணையன்புடன் வரவேற்று இன்சொல்வழங்கி மகிழ்வித்தாள்; செல்வம் உள்ளபோது வழியோடு போகின்றவர்கள்கூட மிக்க சொந்தம் பாராட்டி உறவாடுவர், செல்வம் நீங்கினுல் " அவன் யாரோ? நான் யாரோ? அவனுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?" என்று நீங்குவர்; இது உலக இயற்கை; உறவினர்களில் யார் நீங்கினும் மனைவி கணவனைவிட்டு நீங்குவது கூடாது; உறுப்புக்களில் கண்எப்படி சிறந்ததோ அப்படி உறவினர்களில் கணவன் சிறந்தவன்; சுமங்கலிகள் தனது திருமங்கல்ய சூத்திரத்தைவிட்டு எப்படி நீங்கியிருக்கமாட்டாளோ

உ

ஓம் குஹாய நம:

பதஞ்சலி முனிவர் யோக

சூத்திரம்

R. வெங்கட்டநாராயண சர்மா, வைத்தியர்,
போத்தனூர்-வேலூர், சேலம் ஜில்லா.

யோகம்.

யோகம் என்ற பதத்திற்குப் பொருள்: சேர்தல், ஒன்றுபடல் என்பர் நூலோர். வறுமையாளனொருவன் செல்வனாளனாகும்பொழுது, அவனை யோகமுள்ளவனாக உலகோர் கூறுவர் அதாவது செல்வத்தைச்சேர்ந்தான்; சேர்ந்திருந்த வறுமையைப் பிரிந்தான் என்று உட

அப்படியே தன் சுற்றத்தாரில் யாரைவிட்டுப்பிரிந்தாலும் தனது கணவனைமட்டும் ஒருகணமும் பிரிந்திருப்பது கூடாது; ஒருவன் தனக்குள்ள செல்வச்செருக்காலும், தீயநட்பாலும், அறிவின்மையாலும் பாதாரகமனஞ்செய்து செல்வத்தையள்ளி வாரியிறைத்து ஏழையாகிப், பிறகு உணர்வுவந்து வீட்டுக்குவந்த கணவனை வரவேற்று உபசரித்து, வேண்டியபணிவிடைகளைச்செய்வார் உத்தமப்பெண்டிர்; அப்பெண்டிரது சீரிய ஒழுக்கத்தைக்கண்டு கணவன் தன் அறியாமையை எண்ணி எண்ணி தானேவருந்தி முற்றிலுந்திருந்தி நல்வழிப் படுவான்.

பெண்கள் தங்களுடைய பெண்குழந்தைகளை அடிக்கடி அயல் வீடுகளுக்குப் போகவிடாமலும், தீக்குணங்களுடையாரோடு சேரவிடாமலும், பயனற்ற வார்த்தைகளைப்பேசவிடாமலும், பாதுகாக்க வேண்டும். கற்பொழுக்கத்தைப் போதிக்கும் நல்ல புத்தகங்களைப் படிக்கச்செய்யவேண்டும்; தாங்கள் சமையல்செய்யும்போது தங்கள் பெண்மக்களையும் அருகில்வைத்துக்கொண்டு பாகம்பண்ணும் திறத்தைக் காட்டிக்கொடுத்து சமையலில் தேர்ச்சியடையச் செய்யவேண்டும்; பெண்களுக்கு இனிமையாகச் சமைப்பது இன்றியமையாத வேலையல்லவா? தேவாமிர்தமென்று அதிசயிக்குமாறு—கையும் வாயும் கமழுமாறு சமைக்கவேண்டும்; சமைத்த உணவைக் கணவனுக்கு அருகிருந்து படைக்கவேண்டும்.

(தொடரும்)

நிகழ்ச்சியாய் பிரிதற்பொருளும் பெறப்படுகின்றது; ஒன்றைப்பிரிந்து மற்றொன்றைச்சேர்தலே யோகத்தின் தேர்ந்தபொருள் ; குறைவைப் பிரிதலும் நிறைவை நேர்தலுமே நேர்மையென்பது கருத்து விஷயாதிகளுடன்கூடிய ஜீவன் ; அவ்விஷயாதிகளினின்றும் பிரிந்து, சமாதிசம்பத்துக்களைக் கூடுதலே குறித்தயோகமாகும் என்பர் அறிவோர். பாசத்தோடு கட்டுண்ட பசுக்கள் அப்பாசத்தினின்றும் நீங்கிப் பதியோடு கூடுதலே உயர்ந்தயோகம் ; இதற்குமேல் சிறந்த யோகம் மற்றொன்றில்லை யென்பர் சைவர்; இச்சிறந்தயோகத்தையே அதிகாரிகளுக்குத்தக்கபடி அடையும் வழிகளைப் பலபடித்தாக பதஞ்சலிமுனிவர் தாமியற்றிய யோகசூத்திரத்திற் பகர்ந்துள்ளார்.

2. தனக்குவமை யில்லாதான் றாள்சேரக் கூவிக்கூறும் முடிந்த முடிபான வேதாந்தசித்தாந்தச் செல்வ நூல்களில் விரவியுள்ளயோகம், வைத்திய நூல்களிலும் சோதிட நூல்களிலும் பரவி மிளிர்கின்றன. பல மருந்துச்சரக்குகளின் கூட்டுக்கு யோகம் என்று மருத்துவ நூல் கூறும் ; சோதிடத்திலோ எடுத்ததெல்லாம் யோகந்தான் ; அமிர்த யோகம், சித்தயோகம், ராஜயோகமெனப் பலயோகங்களைக்கூறும் ; எவ்வகையிலும், பாலர்முதல்பலரும் யோகத்தைப் பொருள்தெரிந்தோ தெரியாமலோ சிறப்பென்னும் பொருளில் உணர்ந்திருக்கின்றார்களென்பதில் ஐயமின்று ; சோதிட நூலோர் கூறுவதுபோல, யோகம், நம்மை நாடிவரும் காலமுண்டு ; அந்த யோகம் பலவிதங்களாயிருக்கும். இங்கே கூறும் உயர்ந்தயோகமோ, சென்றடையாத திருவுடையானை நாம் நாடி அடைவதாகும்.

3. யோகநூல்களிலும், ஹடயோகம், கிரியாயோகம், லம்பிகா யோகம், ராஜயோகமெனப் பலயோகங்கள் கூறப்படுகின்றன. பகவான் பார்த்தனுக்குப் பகர்ந்த கீதையிலோ 18 யோகங்கள்கூறுகிறார். எல்லா யோகங்களும் முழுதுணர்ந்த முதல்வனையே படிப்படியாய் அடைய உதவுகின்றன ; இரகசியங்களில் உயர்ந்ததும் வித்தைகளிற் சிறந்ததுமான ராஜவித்யா ராஜகுஹ்ய யோகமென ஒன்பதாம்யோகத்திற்குப் பெயர் கீதையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. கீதை கூறிய வழியில் நடப்பவருக்கே பகவானின் மகிமை விளங்குமெனப் பத்தாம் அத்தியாயத்திற்கு விபூதி யோகமெனப் பெயரிட்டனர். கீதாப் பொருள் சித்திக்கவேண்டுமானல் பதஞ்சலிமுனிவர் யோகசூத்திரம் படிக்கத்தக்கது ; சிந்திக்கத்தக்கது ; பிறகே கீதை தெளியத்தக்கது ; கீதை அமிர்தமாகும் ; "கீதவகை பாடிநின்றார் பாங்கிமாரே" என்

ருர் பெரியோரும்; கீதாசார்யனை பகவானுக்கு "யோகேச்வான்" என்ற பெயரும் கவனிக்கத்தக்கது.

4. இக்கட்டுரையில் இதுவரை கூறிவந்த யோகப்பொருளைப் பற்றி பதஞ்சலியாரும், பகவானுங்கூறுகின்ற யோகப்பொருளோடு ஒப்பிட்டுப்பார்க்க நாம் நல்ல யோகப்பயிற்சி பெறவேண்டுமென்று எழுச்சியுண்டாகும். இவ்வெழுச்சியே மேற்போக சாதனமாகும்; நாம் உயர்வையடையவேண்டுமல்லவா? முதலில் பதஞ்சலியார் கூறிய யோகப்பொருளை ஆராய்வோம்; "சித்தவிர்த்திகளைத் தடுத்தலே யோகமாகுமென்ருர்; சுகதுக்க ரூபமான பிரமாணம், விபர்யயம், விகற்பம், நித்திரை, ஸ்மிருதி என்ற ஐவகையான எண்ணங்களைத் தடுப்பதிலிருந்து, எண்ணங்களுக்குச் சாக்ஷியாகவுள்ள, தான், தனது உண்மைநிலையில் நிலைத்தல்கூடும்; எண்ணங்களைத் தடுக்காதநிலையிலோ அந்தந்த எண்ணங்களின் உருவமுடையவன்போலாகி சுகதுக்காதி பலன்களை ஏற்று, அவைகள் மனதில் தங்கியிருக்க இடம் விடுகிருன்; இதுவே பிறவிப் பெருங்கடலாகும்; இக்கடலை நீந்த இறைவனடி சேரவேண்டும்; இறைவனடி கூடற்குப் பழக்கமும் துறவும் வேண்டும்; எண்ணங்களைத் தடுக்கும் பயிற்சியே துறவுக்குக் காரணமாயும் துறவும் எண்ணங்களைத்தடுப்பதற்குக் காரணமாயும் ஒன்றுக்கொன்று காரணகாரியமாகயிருந்து இரண்டுங்கூடி, மனதை அவனருளால் அவனருள் வணங்கியென ஈசனடியிற் சேர்க்கின்றன, இது பதஞ்சலியார் கூற்று. "பிறவிப்பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்" என்ற குறட்கருத்துமிதுவேயாம். யோகம் இன்னதென நாம் அறிந்துகொள்வதினுலும், அதன் பெருமையைப்பற்றி பிறர் மெச்சப் பேசுவதாலும், இறைவனடி கூடல் இல்லை; ஒரு பொருளைப் பற்றிய அறிவினல் மாத்திரம் அப்பொருளை அடைதல் கூடாது; உழைப்பே உதவுந்தன்மை யளிக்கும்; "யோகிகள் மனம் திருந்துவதற்காக பற்றைவிட்டு சரீரத்தாலும், மனத்தாலும், புத்தியாலும் வெறும் இந்திரியங்களாலும் கர்மத்தைச் செய்கிருர்கள்" என்று கீதை 5, 11-ல் கூறியபடி உடல்கொண்டு செய்யவேண்டிய உண்மை வாழ்க்கை முறையால் கூடுவது அது.

5. இனி யோகத்தைப்பற்றிய கீதையின் கருத்தைக் காணுவாம். "தனஞ்சய! யோகத்திலே நிலைத்துப் பற்றைவிட்டு, பயன் கைகூடுவதிலும் கூடாமையிலும் சமமாகயிருந்து கர்மங்களைச்செய்

சமமாகயிருத்தலே யோகமாகும். (2-48) இங்கு யோகத்திலே நிலைத்து என்பதற்கு கடமையிலே தவராது என்பது பொருள். சமம் என்பதற்கு அகக்கரண விர்த்திகளைத் தடுத்தல் என்றும் பொருள்; அப்பொழுதுதான் விருப்பு வெறுப்புக்களற்று சுக துக்கங்களில் சமமாயிருத்தல்கூடும்; அடுத்தாற்போல் யோகத்தை பகவான் புகழ்கிறார்: "எதனை அடைந்து பின்பு அதனினும் அதிகமாக வேறு லாபத்தை நினையானே, எதிலே நிலைத்து மிகப் பெரிய துன்பத்தாலும் அசைக்கப்படானோ, துன்பத்தின் சேர்க்கையிலிருந்து பிரிதலையுடைய அதனையே யோகமென்று அறிந்துகொள்ளவும் (6—22, 23) இதன் மகிமையைக்கருதியே "தவமுடையவரைக் காட்டிலும் யோகி மேலானவன்; ஞானமுடையவரைக்காட்டிலும் கூட மேலானவனாக எண்ணப்படுகிறான்; இன்னும் கர்மமுடையாரைக்காட்டிலும் யோகிமேலானவன்; ஆதலால் அர்ஜுனா! நீயேயோகியாகக்கடவாய்" என்கிறார் (6-46). முயலும் யோகிகள் தம்மிடத்துள்ள புருஷனைக்காண்கிறார்கள் என்பது பகவான் வாக்கானபடியால் நமது நடப்புக்கு நேர்மையானபாதை இதுவேயெனப் பெரியோர் தெளிந்து காட்டியிருக்கும் யோகம் நம்மால் முயற்சிக்கத் தக்கதே; "முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை இன்மைபுகுத்திவிடும்" என்ற குறட்பாவையும் ஓர்ந்து, இது நம்மாலாகுமா, ஊழிருந்தால்தானே கிட்டும் என இடக்குப்பேசாமல், இந்த யோகநூல் பயிலுதற்கும், அதிற்கூறியுள்ளபடி சாதனங்களை முயன்று அனுஷ்டிப்பதற்கும் ஏற்றதென அவாவுள்ள அன்பர்கொள்ளவேண்டும்.

6. எல்லாம்வல்ல இறைவன் அடியேனது கருத்தில்தங்கி தூண்டியபடிக்குப் பல மொழிபெயர்ப்புக்களை விரிவுரைகளோடு பலமுறையும் தனது அனுபவத்தோடும் பயின்ற அடியேனது ஸத்குரு ஸ்ரீ ராதாபிக்ஷுதீர்த்த ஸ்வாமிகளது வினாவிடைரூபமான அச்சியற்றப்படாத கையெழுத்துப்பிரதியின் தன்மையைத் தழுவியும் எம்மனோர்களால் கேட்கப்பட்ட பாடக்கருத்துக்கொண்டும், யோகநெறியில் பழகிவருகிற அனுபவங்கொண்டும், பதஞ்சலியார் யோகநூலை மூலமாத்திரம் இப்பொழுது தெய்வகிருபையால் வெளியிடமுன்வந்திருக்கின்றனன். தற்காலம் நம்நாட்டின் யோகநிலைமைக்கு இந்த நல் யோகம் மிகப்பொருத்தமுள்ளதாகும். உலகம் பிழை பொறுத்து அருள்கூர வேண்டுகிறேன். (தொடரும்.)

188

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தகுரு துணை.

கொழும்புமாநகர் விவேகானந்த சபையின்

35 ஆவது ஆண்டு நிறைவுவிழா அவைத்தலைவர்

தூத்துக்குடி உயர்திரு சித்தாந்த ஆசிரியர்:

ந. சிவகுருநாத பிள்ளையவர்கள்

நிகழ்த்திய

தலைமைப் பேருரை.

29—5—38.

"நல்லராற்றவு ஞானநன்குடையர் தம்மடைந்தவர்க் கருளீய
வல்லர்பார்மிசை வான்பிறப்பிறப்பிலர் மலிகடன் மாதோட்டத்
தெல்லையில்புக ழெந்தைகேதீச்சர மிராப்பக லினைந்தேத்தி
யல்லலாசறுத் தானடியிணைதொழு மன்பரா மடியாரே"

—சம்பந்தர்.

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்"

—சேக்கிழார்.

சிவநேயச் செல்வர்களே, செல்விகளே!

உங்கள் பொன்னார் திருவடிகட்கு அடியேனது வணக்கம் உரியதாகுக. உங்கள் தென்னிலங்கைத் திருநாடு திருக்கேதீச்சரம், திருக்கோணமாமலை என்னும் இரு பாடல்பெற்ற சிவத்தலங்களையும், கதிர்காமம் என்னும் முருகப்பெருமான் ஆடல்புரியும் திருத்தலத்தையும் தனக்கு அணிகலனகக்கொண்டு விளங்குகின்றது. "தள்ளா விளையுளுந் தக்காரும் தாழ்விலாச்—செல்வருந் தொக்கதுநாடு" என்னும் திருக்குறளுக் கிலக்கியமாய்த் திகழ்வதும் உங்கள் நாடன்றோ! சைவத்துக்கும் தமிழுக்கும் புத்துயிரளிக்கத் திருஅவதாரம் செய்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள், உயர்திருவாளர்கள் சபாபதி நாவலரவர்கள், அம்பலவாண நாவல சுவாமிகள், மகாவித்வான் பொன்னம்பலம் பிள்ளையவர்கள், சங்கர பண்டிதரவர்கள், சாமிநாத பண்டித

ரவர்கள், சிவப்பிரகாச பண்டிதரவர்கள், காசிவாசி, சி. செந்திநாதைய ரவர்கள், அ. குமாரசுவாமிப் புலவரவர்கள், சி. வை, தாமோதரம் பிள்ளையவர்கள், சபாரத்தின முதலியாரவர்கள், சி. தாமோதரம் பிள்ளையவர்கள், திருவிளங்கமவர்கள் முதலிய பல வித்துவசிரோன் மணிகள் தோன்றியதும் உங்கள் திருநாட்டிலன்றோ! சைவமும் தமிழும் தழைக்கப் பெருங்காவலராயமர்ந்து குன்றாச் செல்வமும், பொன்றாப் புகழும் பொலிந்து விளங்கிய உயர்திரு குமாரசுவாமியார், இராமநாதர், அருணாசலத்தார் என்னும் மும்மணிகள் தோன்றியருளி யதும் உங்கள் தென்னிலங்கைத் திருநாட்டிலன்றோ! இத்தகைய திருநாட்டின் தலைநகரமாய்க் கலந்தருபொருளும் நிலந்தருபொருளும் நிறைந்து நிலமகட்கொரு திலகம்போன்று விளங்கும் கொழும்புமா நகரமாகிய இத்திருநகரின்கண், அமெரிக்காமுதலிய மேலைநாடுகட்குச் சென்று இந்து சமயம் இணையற்ற ஒரு மெய்ப்பெரும் சமயம் என்பதனை நாட்டி வெற்றிமாலைசூடிய முனிபுங்கவராகிய ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள் திருப்பெயரால் நிறுவப்பெற்றுள்ள விவேகானந்த சபையாகிய இச்சீரிய சபையின் முப்பத்தைந்தாம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடி மகிழுதற்பொருட்டு அறிவிற் சிறந்த நீங்களெல்லீரும் ஈண்டுக் குழுமியிருக்கின்றீர்கள் இப்பேரவை பொன்னம்பலம்போன்று விளங்குகின்றது. இதற்கு அம்பலவாணனே அன்றி அவன் மெய்யருள்பெற்ற அடியவர் ஒருவரோ தலைமை பூணுதலே தக்கதாகும். கல்லாதவரிற் கடைப்பட்ட நாயேன் தலைமை தாங்குதற்கு எவ்வாற்றாலும் உரியேனல்லேன். அங்ஙனமாகவும் அடியேனைத் தலைமை வகிக்குமாறு ஆணையளித்திருக்கின்றீர்கள். இவ்வாறு தாங்கள் ஆணையளித்தமைக்குரிய காரணத்தை அடியேன் நன்குணர்வேன். அது, ஐம்பது ஆண்டுகட்கு மேலாகச் சித்தாந்த சைவச் செழும்பயிரைச் செம்மையாக வளர்த்துவரும் தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபையில் நாற்பது ஆண்டுகளாகத் தமியேன் ஒரு தொண்டனாக அமர்ந்து இயற்றிவரும் சிறிய தொண்டுகளைப் பெரிதாக மதித்துள்ளமையேயாகும். இனி, அன்பர்களாகிய உங்கள் ஆணையை மறுத்தல் தகாதென அஞ்சியே இட்ட பணியைத் தாழ்மையுடன் ஏற்றுக்கொள்ளுகிறேன்.

அன்பர்களே!

“வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி யுயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்

கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே ”

என திருவாதவூர் அடிகள் கூறியருளியவாறு கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டுபவன் எல்லாம்வல்ல சிவபரஞ்சுடரேயாதலின் அவன் திருவருள் வழியினின்று அடியேற்கு அளித்த தலைமைப்பணியைச் செய்துமுடிப்பேனாக.

பெரியோர்களே!

நாமெல்லாம் சைவமாம் சமயஞ்சாரும் ஊழ்பெற்றிருக்கின்றோம். ஆதலின் அதன் அருமை பெருமைகளை ஒருவாறு உணர்ந்துகொள்ளுதல் நலனெனக்கருதி ஒரு சில ஈண்டுக்கூறுகின்றேன்.

1. சைவசமயத்தின் பழமை.

சைவசமயம் இன்னகாலத்துத் தோன்றியது என்பதை அறியக்கூடவில்லை. கடற்கோட்பட்ட லெமூரியாகண்டமே முதற்கண் மக்கள் வாழ்ந்த இடம் என்றும், அங்கு வாழ்ந்த மக்களாற் கைக்கொள்ளப்பட்ட சமயம் சைவசமயமே என்றும் சில சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுகின்றார்கள். அன்றியும் சிதம்பரம், திருவாரூர், மதுரை முதலிய தலங்களிலுள்ள திருக்கோயில்கள் மிகப் பழையகாலத்தன என்பதைத் தாமே காட்டிக்கொண்டிருக்கின்றன. சுமார் ஆயிரத்து முந்நூறு ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்தருளிய ஸ்ரீ அப்பர் சுவாமிகள்,

“ ஒருவனா யுலகேத்த நின்ற நாளோ
ஓருருவே மூவுருவமான நாளோ
கருவனாய்க் காலனை முன் காய்ந்த நாளோ
காமனையுங் கண்ணழலால் விழித்த நாளோ
மருவனாய் மண்ணும் விண்ணும் தெரித்தநாளோ
மான்மறிக்கை யேந்தியோர் மாதோர்பாகந்
திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே ”

எனக் கூறியவாற்றால் இவ்வுண்மை இனிதுவிளங்கும். இனி இச்சமயம் மிகப் பழையகாலத்தனவேனும் என்றுமோரியல்பினனாகிய இறைவனைப்போன்று தன்னியல்பிற் சிறிதும் மாறுபடாதிருத்தல் வியப்பன்றோ!

2. தத்துவ ஆராய்ச்சி.

இனி, இக்காலத்து மேற்றிசை அறிவியல் வல்லார் தமது ஓர்த்துணரும் ஆராய்ச்சித்திறத்தாற் காணப்பெறும் தத்துவ உண்மைகட்கு மாறுபட்டு ஒழியும் சமயங்களோ பல. ஆனால் நமது சமயம் முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாய்ப் பின்னைப்புதுமைக்கும்

பேர்த்துமப்பெற்றியனும் இறைவனைப்போல புதிய தத்துவ ஆராய்ச்சிக்கொள்கைகட்கும் ஒத்தனவாகவே காணப்படுகின்றது. "இல்லது வாராது உள்ளது போகாது", "ஓரியல்புடைய பொருள் மற்றோர் இயல்புடைய பொருளாக மாறாது" என்பன போன்றவை தற்கால ஆராய்ச்சிக்கும் நமது சமயதத்துவ ஆராய்ச்சிக்கும் ஒத்தனவேயாகும். காணப்படும் சடப்பொருள்களாகிய அறிவில் பொருள்களெல்லாம் 'மாயை' என்னும் முதற்காரணமாகிய ஒன்றினின்றே உண்டாவன என்பது நமது சமயக்கொள்கை. உலகிற்குரிய மூலப்பொருள்கள் பலவுள எனக் கூறிக்கொண்டிருந்த தற்கால ஆராய்ச்சியாளர்கள் இப்பொழுது எல்லாம் ஒரு பொருளினின்றே தோன்றுகின்றது என்னும் நமது சமயமுடிவுக்கு வந்திருப்பது சிந்திக்கத்தக்கது. இன்னும் நவீன ஆராய்ச்சியாளரால் கண்டறியப்படாத தத்துவங்கள் பலவுள. தத்துவங்களின் உண்மைகூற எழுந்த ஏனைச்சமயங்களும் ஆன்மதத்துவமாகிய இருபத்துநான்கு தத்துவங்களுடன் நின்றுவிட்டன. நமது சைவசமயமோ அவற்றின்மேலும் வித்தியாதத்துவ, சிவதத்துவங்களாகிய பன்னிரண்டு தத்துவங்கள் உளவெனக் கூறி அவற்றின் இயல்புகளையும் விளங்க உரைக்கின்றது.

3. ஏனைச் சமயங்களைத் தழுவுதல்.

இனி, மாணவர்களின் அறிவு வேற்றுமைகட்கு ஏற்ப ஒரு கலாசாலையில் பல வகுப்புகள் அமைக்கப்பெற்றிருப்பதுபோல, மக்களின் புண்ணிய பரிபாகத்திற்கேற்பப் பல சமயங்கள் வேண்டப்படுவதும் நியாயமேயாகும். இவ்வுண்மையுணாமாட்டாத சமயங்களெல்லாம் ஒவ்வொன்றும் தானே மெய்ச்சமயம் என்றும், மற்றைச் சமயங்களெல்லாம் பொய்ச்சமயங்கள் என்றும் அவற்றின்வழி ஒழுகுவோர் நிரயமே புகுவர் என்றும் கூறக்காண்கின்றோம். ஆனால் நமது சமயமோ அவ்வாறு கூறுவதில்லை. பெருங்கருணைத் தடங்கடலாகிய இறைவன் எல்லா உயிர்களையும் தமது திருவடிக்கு ஆளாக்கிப் போனந்தப் பெருஞ்செல்வத்தை அவற்றிற்கு அளித்தல்வேண்டும் என்னும் திருவுள்ளமுடையனாகலானும், இக்கருத்துப்பற்றியே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் ஓவாது செய்துகொண்டிருக்கின்றானாகலானும் எச்சமய நெறி நிற்பினும் அன்னோரை ஆட்கொண்டருளுவானெனவே கூறுநிற்கும்.

"விரிவிலா அறிவினர்கள் வேறொரு சமயம் செய்தே
எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாகும்"

என்பது அப்பர்சுவாமிகள் திருவாக்கு. அன்றியும் நமது சைவசமயம் ஏனைச்சமயப்பொருள்களை ஆராய்ந்து அவற்றின் வன்மை மென்மை கட்கேற்பப் புறப்புறச்சமயம், புறச்சமயம், அகப்புறச்சமயம், அகச் சமயம் என நான்கு பிரிவுகளாக வகுத்து அவற்றைத் தனக்குப் படி முறையாகக்கொண்டிருக்கின்றது.

4. சமயப் பொருள்பற்றிய ஆராய்ச்சி.

இனி, ஏனைச் சமயங்களெல்லாம் தத்தம் உண்மைகளை வாளா கூறியொழிந்தனவேயன்றி அவற்றை அளவைகளான் ஆராய்ந்து நிலைநிறுத்தவில்லை. ஆனால் நமது சமயமோ அவ்வாறின்றிப் பொரு ளுண்மைகளையும் அவற்றின் இலக்கணங்களையும் அளவைமுகத்தான் ஆராய்ந்தே முடிவுகட்டியிருக்கின்றது. ஆசிரியர் மெய்கண்டதேவ ரால் அருளிச்செய்யப்பெற்றுள்ள சிவஞான போதம் என்னும் ஒப் பரும் நூலை நோக்குவோமாக. அது, பொது உண்மையென இரு அதிகாரங்களையும், பிரமாணம், இலக்கணம், சாதனம், பயன் என நான்கு இயல்புகளையும், ஒவ்வோர் இயலினும் பல அதிகாணங்களையும் வகுத்துக்கொண்டு பதி-பசு-பாசம் என்னும் முப்பொருள்களைப்பற்றி செய்யும் ஆராய்ச்சித்திறன் மிகவும் நுட்பமும் செப்பமும் செறிந்த தாகக் காணக்கிடக்கின்றது. இவ்வாராய்ச்சியில் வேதாந்த சூத்திர மாபாடியக்காரர்களான ஸ்ரீசங்கர, இராமாநுஜ, மத்துவ ஆச்சாரியர் களால் உண்மைகாணப்பெறாத "அத்துவிதம்" என்னும் சொல்லின் ஆராய்ச்சி செய்யப்பெற்றிருக்கின்றது. அத்துவிதம் என்னும் சொல் உபநிடதங்களிற் கூறப்பட்டுள்ள ஒரு சிறந்த சொல்லாகும். அச் சொல்லுக்கு விளக்கம்கூறவந்த ஸ்ரீசங்கராச்சாரியார், அகரம்-அன்மை இன்மை, மறுதலைப்பொருள்களை உணர்த்தும் எனக்கூறும் இலக்கண விதியுள் "அத்துவிதம்" என்னும் சொல்லின்கண்வந்த அகரத்திற்கு இன்மைப்பொருள்கொண்டு "பிரமம்-உலகம் என இருபொருள்க ளில்லை, பிரமம் என்னும் ஒரே பொருள்தான் உள்ளது" என முடிவு செய்துள்ளார். ஸ்ரீஇராமாநுஜாச்சாரியார் "உலகம் என்னும்பொருள் ஒன்று உண்டென்பது காட்சியளவையானும் உரையளவையானும் அறியக்கிடத்தலின் அதனை இல்பொருள் என்றல் பொருந்தாது. ஆத லின் உலகத்துக்கு விசிட்டமாயிருக்கின்ற பிரமப்பொருள் இரண் டில்லை ஒன்றேயுள்ளது என்பதே பொருத்தமுடைத்து" எனஅவரும் அகரத்திற்கு இன்மைப்பொருள்கொண்டே உரைசெய்தார். ஸ்ரீமத்து வாச்சாரியார் அகரத்திற்கு மறுதலைப்பொருள்கொண்டு இரண்டன்

மறுதலை ஒன்றென்னவே ஒன்றன் மறுதலை இரண்டெனவே கொள்ளப்படும் எனக்கொண்டு "பிரமம் உலகம் என்னும் இரு பொருள்கள் வேறுவேறாக உள்ளன" என உரைசெய்தார். இங்ஙனம் அவரவர் கொண்ட உரைக்கேற்பப் பாடியங்களையும் வேறுவேறாகச் செய்வாராயினர். இம்மூவர் கூற்றுக்களும் பொருத்தமில்லன என்பது ஆசிரியர் மெய்கண்டதேவரின் திருவுள்ளமாகும்.

அகரம் - அன்மை, இன்மை, மறுதலைப்பொருள்களைப் பயக்குமேனும் "அத்துவிதம்" என்னும் எண்ணுப்பெயர்மேல்வந்த அகரம் அன்மைப்பொருள் மாத்திரையே யுணர்த்துமன்றி இன்மை மறுதலைப் பொருள்களை உணர்த்தமாட்டாது என்பது உலகவழக்கில் அறியக் கிடப்பதோர் வாய்மையாகும். "அநேகம்" என்னும் சொல் ஒன்றல்ல பலவென்பதனை யுணர்த்துமன்றி ஒன்றில்லை சூனியம் என்பதனை யுணர்த்துமாறில்லை யென்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்ததொன்றாகும். ஆகவே ஆசிரியர் ஸ்ரீ மெய்கண்டதேவர் "அத்துவிதம்" என்னும் சொல்லுக்கு இரண்டல்லவெனவே பொருள்கொண்டு என் அருமறைகள் உலகமும் இறைவனும் இரண்டல்லவெனக் கூறியன என்பதின் தாற்பரியத்தை,

"பண்ணையு மோசையும் போலப் பழமதுவும்
எண்ணும் சுவையும்போல் எங்குமாம் — அண்ணல்தாள்
அத்துவிதமாத லருமறைகளொன்றென் னாது
அத்துவித மென்றறையு மாங்கு"

என்னும் திருவெண்பாவினால் விளக்கியருளினர்.

(இதன் கருத்து) இறைவன் திருவருள் பண்ணும் அதன் ஓசையும்போலவும்; பழமும் அதன் சுவையும்போலவும்; ஒளபச் சிலேடிக வியாபகமாய் உயிர்களுடன் வேற்றுமையின்றி அதுவதுவாய் நிற்றலின், இறைவனும் உயிர்களும் வேறென்றாவது, இறைவனும் உயிர்களும் வெவ்வேறு பொருள்களாதலின் ஒன்றென்றாவது கூறாமல் இரண்டல்லவென (அத்துவிதமென) மறைகள் பொதுப்படக் கூறிற்றென்பதாம். இங்ஙனம் அத்துவிதத்தின் உண்மைப் பொருளைக் கண்டமையானன்றோ ஸ்ரீ மெய்கண்டதேவரை

"பொய்கண்டார் காணாப் புனிதமெனு மத்துவித
மெய்கண்ட நாதனருள் மேவுநா ளெந்நாளோ"

என ஸ்ரீ தாயுமானசுவாமிகள் துதிப்பாராயினர்.

அன்றியும், உபநிடதங்களில் தன்னைச் சிவமாக அல்லது பிரமமாகப் பாவிக்கவேண்டி "சிவோகம்", "பிரமாகம்" என்னும்சொற்

கள் கூறப்பட்டிருக்கின்றன. விடநிவிர்த்தியின்பொருட்டுக் கருடோகம் பாவனைசெய்யப்படுவதுபோல, மலநீக்கத்தின்பொருட்டு சிவோகம் பாவனைசெய்யுமாறு விதிக்கப்பட்டதுஎன்னும் உண்மை சிவஞானபோதம், சித்தியார் என்னும் இருநூல்களினும் செவ்வையாக விளக்கப்பெற்றிருக்கின்றது. இவ்வுண்மையறியாதார் சீவன் பிரமசொரூபமாதலின் தன்னைப்பிரமமாகப் பாவிக்குமாறு உபநிடதங்களில் விதிக்கப்பெற்றிருக்கின்றது என உரைக்கின்றார்கள். சீவன் பிரமமாயிருந்தால் தானே தன்னைப் பிரமம் என்று பாவிக்கவேண்டியதென்னை என்பதனை அவர்கள் உணர்கின்றிலர்.

5. பொருட் பெருக்கம்

இன்னும் நமது சைவசித்தாந்த மெய்யருணூல்களில் கூறப்படும் பொருள்கள் பல. அவையாவன: பதி-பசு-பாசம் என்னும் முப்பொருளுண்மை, அவற்றின் சொரூப, தடத்த (சிறப்பு-பொது) இலக்கணங்கள், பதிப்பொருள் சிவமே என்பது, சிவத்தின் இலயபோக, அதிகார இயல்புகள், சிவபெருமான்செய்யும் ஐந்தொழில்கள், அவற்றின் பயன், சிவத்தின் நவந்தருபேதம், சிவம் சத்தி என்னும் இரண்டின் சம்பந்தம், சத்திபேதங்களும், தொழில்களும், ஆன்மாக்களின் பேதம், ஆன்மாவுக்கும்—மாயை கன்மங்களுக்கும் உள்ளசம்பந்தம், ஆன்மா கன்மத்தால் பிறந்திறந்துழலும் தன்மைகள், பிறவியின் பேதங்கள், உடலின் பேதங்கள், மாயையின் வகைகள், அவற்றினின்றும் பிறக்கும் தத்துவங்கள், தத்துவங்களின் செயல்கள், தத்துவ கர்த்தாக்கள், பிரமன் விண்டு முதலிய மூர்த்திபேதங்கள், அவர்களின் செயல்கள், சிவபிரான் தலைமைத்தன்மை, கேவல சகல சுத்தமாகிய காரண அவத்தைகளின் இயல்புகள், சாக்கிர முதலிய காரிய ஐந்தவத்தைகள், அவற்றிற்குரிய கருவிபேதங்கள், புண்ணிய பாவங்களின் வகைகள், பெத்த முத்திகளின் இயல்புகள் முதலிய பல விடயங்கள் கூறப்பெற்றிருக்கின்றன. சுருங்கக்கூறின் நமது சைவசித்தாந்த சாத்திரங்களிற் கூறப்படாத உண்மைகளும் ஆராய்ச்சிகளும் பிறிதில்லையென்பதாம்.

அன்பர்களே!

மேலே கூறியவாற்றால் நமது சைவசமயம், மிகப்பழமையுடையதும், புதிய ஆராய்ச்சிகட்கு மாறுபடாததும், தனது பொருளுண்மைகளை அளவைப் பிரமாணங்கொண்டு விளக்குவதும், ஏனைச் சமயங்களைத்தழுவும் விரிந்த நோக்கமுடையதும், வேதாந்தமாகிய உபநிடதங்

களிற் றெளிவுபடாத உண்மைகளை இனிது விளக்குவதும், பொருட் பெருக்கமுடையதும் ஆகும் என்பது ஒருசிறிது விளக்கப்பட்டது.

6. வேண்டுதல்.

பெரியோர்களே !

நமது ஒப்பரும் பெருமைவாய்ந்த சைவசமயம் முற்காலத்து முடியுடை வேந்தர்களாலும், சைவ மக்களாலும் நன்கு போற்றப்பெற்று வந்தது. அளவிலாப் பொருட்செலவில் எண்ணிறந்த பெரிய பெரிய சிவாலயங்கள் நிறுவப்பெற்றுவந்தன. நமது சமயம் பிறசமயிகளாற் கேடுறுவண்ணம் சமயாச்சாரியர்களாலும், சைவ நன்மக்களாலும் போற்றப்பெற்றது. சமயாச்சாரியர் முதலினோர் நாமெல்லாம் ஓதி உய்யும்வண்ணம் பன்னிரு திருமுறைகளை இயற்றியருளினார்கள். ஸ்ரீமெய்கண்டதேவர் முதலிய சந்தானகுரவர்கள் மெய்யருள்ஞான நூல்களை அளித்தருளினார்கள். ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் மாபாடியங்களுட் சிறந்த சித்தாந்த மாபாடியம் உரைத்தருளினார்கள். சைவாதீன கர்த்தர்கள் சாத்திர உண்மைகளைச் சைவ மக்கட்குப் போதித்தும், சமயவிசேட நிருவாண தீக்கைப்பேறுகளை அளித்தும் வந்தார்கள். சைவ மக்களெல்லாம் சமயசாத்திரங்களை நன்குணர்ந்தும், சைவாநுட்டானம் சிவபூசைமுதலிய சமயநெறிகளில் ஒழுகியும், வந்தார்கள், இவ்வாறெல்லாம் விழுப்பமுற்றிருந்த நமது சமயநிலை இன்று எவ்வாறு இருக்கின்றதென்பதை நீங்களெல்லீரும் நன்குணர்வீர்கள். நமது சமயத்தைக் கண்ணும் கருத்துமாய்ப் போற்றுவாரில்லை. சமயஞானமும், சமயஒழுக்கமும் நம்மவர்களிடத்தில் அறவே ஒழிந்துவிட்டன, புறச்சமயத்தாரால் நமது சமய மக்கள் கோடிக் கணக்காய்க் கொள்ளைகொள்ளப்படுகின்றனர். சமயபோதனை செய்ய வேண்டிய சைவாதீனங்கள் அறவே அதனைக் கைவிட்டுவிட்டன. சிவாலயங்கள் பல இடிந்தும் தகர்ந்தும்போயின. இவ்வாறெல்லாம் சீர்கெட்டுக்கிடக்கும் சைவத்துறைகளை மீண்டும் சிறப்புறச் செய்ய வேண்டியது சைவமக்களாகிய நமது கடமையென்பதை நாம் ஒவ்வொருவரும் உணரவேண்டும். சைவம் ஆண்-பெண்-பாலர் முதலிய எல்லாருக்கும் பொதுஉடைமையாதலால் ஆடவர்களேயன்றிச் சைவ மங்கையர்களும், சைவ இளைஞர்களும் சைவபரிபாலன முயற்சியில் ஈடுபட்டு உழைக்க முன்வரவேண்டும். சைவபரிபாலனத்துக்கு என நிறுவப்பெற்றுள்ள நமது விவேகானந்த சபையையும், ஏனைய சபைகளையும் நாம் ஆதரிக்கவேண்டும். இனி நமது விவேகானந்த சபை

யார் நன்மாணவர்கட்கு சைவசித்தாந்த நூல்களும், தமிழ் இலக்கண இலக்கியங்களும் கற்பிப்பதுடன் பரீக்ஷைகளும் ஏற்படுத்தியிருப்பதாக அறிகின்றேன். இதற்கெல்லாம் பொருட்டுணை வேண்டுவது இன்றியமையாதது. செல்வர்களும், சீமாட்டிகளும் சபைக்குவேண்டும் பொருள்களை வரையாது வழங்கி நிகரறு நற்சிவதரும சிவஞானத்தை வளர்த்து, என்றும் பொன்றாப்புகழும் இன்பமும்பெற்று இனிது வாழ்வார்களாக.

7. வாழ்த்து.

நமது விவேகானந்த சபை நீடூழி நிலைபெற்று, என்றும் சைவ வான்பயிரை வளர்த்துக்கொண்டிருக்கும்வண்ணம் திருவருள்பாலிக்க என்னையாளுடைய திருஞானசம்பந்தப்பெருமான் பொன்னடிகளைப் போற்றுகின்றேன். சபையை நன்கு பரிபாலித்துவரும் சீரியர்களும் சபையின் தொண்டுகளைக் கைமாறு கருதாது ஆர்வத்துடனும், ஊக்கத்துடனும் ஆற்றிவரும் மெய்யன்பர்களும் எல்லாநலன்களும்பெற்று இனிது வாழ்வார்களாக.

இதுகாறும் எனது புன்மொழிகளைப் பொறுமையுடன் செவிமடுத்த உங்கள் திருவடிகட்கு மீண்டும் ஒருமுறை வணக்கம்செய்கின்றேன்.

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.